**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**அசல் வழக்கு எண்.230/2017**

உ.கோமதிபாண்டியன் ----- வாதி

//எதிர்//

குருலட்சுமி மற்றும் 2 நபர்கள் ----- பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணச் சட்டப்பிரிவு | -- | (அ) 25(b) (ஆ) 31 |
| வழக்கின் தன்மை | -- | (அ)விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு<br>(ஆ) நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு |
| வழக்கின் மதிப்பு | -- | (அ) Rs.30,084/- அதில் பாதி Rs.15,042/-<br>(ஆ) Rs.1000/-<br>மொத்தம் Rs.31,084/- |
| செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | -- | (அ) Rs.451.50/-<br>(ஆ) Rs.30/-<br>கூடுதலாக 18.50/- சேர்த்து ரூ.500/–க்கு நீதிமன்றமுத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

//உத்தரவுப்படி//

தலைமை எழுத்தர்

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**முன்னிலை : திரு.R.நரசிம்மமூர்த்தி, எல்.எல்.பி.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17–ஆம் நாள் திங்கள்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.230/2017</u>**

**<u>CNR.No. TNTL1A-000264-2017</u>**

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், வயலி மிட்டா, பிள்ளையார் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் உள்ளமுடையார் அவர்கள் குமாரர், இந்து, வயது 30 உள்ள கோமதிபாண்டியன் ––––– வாதி

//எதிர்//

1. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், வயலி மிட்டா, பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் இசக்கிதுரை அவர்கள் மனைவி, இந்து, வயது 60 உள்ள குருலட்சுமி

2. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், வயலி மிட்டா, பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் இசக்கிதுரை அவர்கள் குமாரர், இந்து, வயது சுமார் 28 உள்ள கருத்தப்பாண்டியன்

3. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், வயலி மிட்டா, பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் கருத்தப்பாண்டியன் அவர்கள் மனைவி, இந்து, வயது 25 உள்ள கோமதி

----- பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, வழக்குரை 1ம் தபசில் சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிரில் விளம்புகை செய்வதன் மூலம், வழக்குரை 1ம் தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென மேற்படியார்கள் பேரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும், வழக்குரை 2ம் தபசில்

பொதுநடைபாதையானது புழக்க உரிமையின்படி உபயவாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென விளம்புகை செய்வதன் மூலம் வழக்குரை 2ம் தபசில் பொதுநடைபாதையை வாதி புழக்க உரிமையின்படி சென்றுபோய் பொதுவாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென மேற்படியார்கள் பேரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படியாகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| <u>வழக்கு தாக்கலான நாள்</u> | : | 13.11.2017 |
| <u>வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள்</u> | : | 13.11.2017 |
| <u>வழக்கு மூலம்</u> | : | 28.09.2004, 02.11.2017 சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| <u>வழக்கு மதிப்பு</u> | : | (அ) Rs.30,084/- அதில் பாதி Rs.15,042/-<br>(ஆ) Rs.1000/-<br>மொத்தம் Rs.31,084/- |

அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற கட்டணத்திற்காகவும், தபசில் சொத்துக்ளின் வழிகாட்டு மதிப்பு Rs.30,084/- ஆக மதித்து, 'அ' பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் சட்டம் பிரிவு 25(b) ன்படி பாதி Rs.15,042/-க்கு ரூ.451.50/- ம், 'ஆ' பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் சட்டம் பிரிவு 31-ன் படிரூ.1000/-ன் பேரில் ரூ.30/–ம் ரூ.18.50/- கூடுதலாக சேர்த்து ஆக மொத்தம் ரூ.500/-க்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று 17.03.2025 வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.அருணாச்சலம் அவர்கள் ஆஜராகியும், வா.சா.1 தோன்றுதலுக்காகப் போதிய கால அவகாசம் கொடுத்தும், வா.சா.1 ஐ அழைத்தும் ஆஜராகாத காரணத்தால், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. That the Suit be and the same is here by dismissed for default.
2. That there be no cost.

( இரு தரப்பிலும் செலவு விபர பட்டியல் தாக்கல் இல்லை)

## 1ம் தபசில்

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், புஞ்சை சர்வே எண்.511/9-ல் செண்ட் 57 ல் மேல்பக்கம் செண்ட் 28-ல் வடகடைசி மேல்பக்கம் செண்டு 3 க்கு மால்

| | |
|---|---|
| வெள்ளத்துரை இடத்துக்கும் | வடக்கு |
| கிரையதாரர்களின் கையிருப்பு (பிரதிவாதிகளின் | |
| பிரஸ்தாப சொத்துக்கும் | மேற்கு |
| சிங்கராஜன் நிலத்திற்கும் | கிழக்கு |
| 2ம் தபசில் சொத்திற்கும், முப்பிடாதி நிலத்திற்கும் | தெற்கு |

ஒரு சதுர அடியின் விலை ரூ.23

Rs.1308 x ரூ.23 = ரூ.30,084/-

<u>**2ம் தபசில்**</u>

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், புஞ்சை சர்வே எண்.511/9–ல் செண்ட் 57 ல் மேல்பக்கம் செண்ட் 28–ல் வடகடைசி மேல்பக்கத்தில் வடகடைசியில் அமைந்துள்ள பொதுநடைபாதைக்கு மால்.

| | |
|---|---|
| 1ம் தபசில் சொத்துக்கும் | வடக்கு |
| பிரதான தெருவுக்கும் | மேற்கு |
| சிங்கராஜன் நிலத்திற்கும் | கிழக்கு |
| முப்பிடாதி இடத்திற்கும் | தெற்கு |

இதற்குள் கிழமேல் அடி 50, தென்வடல் அடி 2 உள்ள பொது நடைபாதை சரி. தபசில் சரி.

2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் என்னுடைய கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(Sd.)xxxxxxxxx**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ.நீ., சங்கரன்கோவில்.
O.S.No.230/2017.
தீர்ப்பாணை
நாள் : 17.03.2025.